# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்:240/பேரூ/2025**
**நாள் : 27. 01 .2026**

திரு. க. பிரகாஷ்,
தக்கோலம்,
இராணிப்பேட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம். – எதிர் மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம், எண். 2, மீனாட்சி அம்மன் கோயில் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. க. பிரகாஷ் என்பவரது 14.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.07.2025 அன்று பெறப்பட்டு, 240/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம், எண். 2, மீனாட்சி அம்மன் கோயில் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. க. பிரகாஷ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 14.07.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"தக்கோலம் பேரூராட்சியில் திடக்கழிவு குப்பைகளை வகைப்படுத்தி அகற்றும் பணிக்காக ஒரு ஒப்பந்தம் (டெண்டர்) வழங்கப்பட்டு, அதற்கான காலம் ஆறு மாதங்களுக்கு முன்பே முடிவடைந்துள்ளது. இருப்பினும், அந்த ஒப்பந்தத்தின் கீழ் எந்தவிதமான பணிகளும் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. அதைவிட அதிர்ச்சிக்குரிய விஷயம் என்னவெனில், உண்மையில் பணிகள் நடைபெறாத நிலையில் இருந்தும், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு தக்கோலம் பேரூராட்சி செயலர் பணிகள் செய்யப்பட்டதாக காட்டி, காசோலை வழங்கியுள்ளார். இது பேரூராட்சி நிதி நிர்வாகத்தில் பெரிய குறைபாடு மற்றும் சந்தேகத்திற்கிடமான செயலில் ஒன்றாகும். ஆகையால், இந்த விவகாரத்தில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு

உண்மை நிலைமையைப் பெற்று, பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தக்கோலம் பேரூராட்சியில் உள்ள சங்கீதா நகர் பகுதியில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளன. அப்பகுதியில் DTCP (Directorate of Town and Country Planning) அனுமதியில்லாத சுமார் 15க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. அவ்வீடுகளின் மனைப் பிரிவுக்கு பேரூராட்சி செயலர் திரு. ரா. மாதேஸ்வரன் மற்றும் பேரூராட்சி மன்ற தலைவர் திரு. S. நாகராஜ் இணைந்து DTCP அனுமதியில்லாத பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் பூங்காக்களை அமைத்துள்ளனர். இதனால் சுமார் ரூ.2 கோடிக்கும் மேலாக மக்கள் வரிப்பணத்தை வீணடித்துள்ளனர். இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் எந்தவொரு வரிப்பணமும் அரசுக்கு செலுத்தவில்லை. இதன்மூலம் தமிழக அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. அதுமட்டுமின்றி வீடு இல்லாத இடத்திற்கு வீட்டுவரி கொடுத்துள்ளனர்.

தக்கோலம் பேரூராட்சியில் S.N. கண்டிகை சாலை தொடர்பாக ஏற்பட்டுள்ள நிலைமை மிகுந்த கவலையளிக்கிறது. 2021–22ஆம் ஆண்டில் டெண்டர் முறையில், பேரூராட்சி நிதியில் இருந்து அந்த சாலைக்கு புதிய தார் சாலை அமைக்கப்பட்டது. இந்த சாலை 2023ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு வந்தது. ஆனால், அதே S.N. கண்டிகை சாலைக்கு 2024-25ஆம் ஆண்டு மீண்டும் ரூ.1.45 கோடி மதிப்பில் NABARD நிதியின் மூலம் புதிதாக தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அரசாணை பிரகாரம், ஒரு தார் சாலை குறைந்தது 5 ஆண்டுகள் வரை சேமிப்புடன் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் 5 ஆண்டுகள் முடிவடையாமல் மறு சீரமைப்பு செய்யக் கூடாது என்பதே விதிமுறை. இங்கு அந்த விதியை முற்றிலுமாக மீறி, 5 ஆண்டுகள் ஆகும் முன்பே மறுபடியும் புதிய சாலை அமைக்கப்பட்டிருப்பது திட்டம் தொடர்பான முறைகேடாகும். இந்த முறைகேட்டுக்கு காரணமானவர் தக்கோலம் பேரூராட்சி அலுவலராக பணியாற்றும் திரு. ரா. மாதேஸ்வரன் ஆவார். அவர் பொதுமக்களின் வரிப்பணத்தை தவறான வழியில் தொடர்ந்து வீணடித்து வருகிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இதுபோன்ற செயல்கள் பொது நிதி மேலாண்மையின் மீதும், மக்கள் நம்பிக்கையின் மீதும் பெரிய கேள்விக்குறியையும் அவமதிப்பையும் ஏற்படுத்துகின்றன. எனவே S.N. கண்டிகை சாலை தொடர்பான இந்த நிதி முறைகேடு குறித்த சிறப்பு ஆய்வு மற்றும் உரிய விசாரணை உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தக்கோலம் பேரூராட்சியில் 2023ஆம் ஆண்டு பெரிய தெருவில் அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலை மிக குறைந்த தரத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. மோசமான கான்கிரீட் கலவை மற்றும் தொழில்நுட்ப பிழைகள் காரணமாக, அந்த சாலை மூன்றே மாதங்களில் ஜல்லியாக பிளந்து சிதைந்து வருகிறது. இது பொதுமக்கள் போக்குவரத்துக்கு பெரும் இடையூறாகவும், பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாகவும் உள்ளது. எனவே, பெரிய தெரு சாலை முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும் தக்கோலத்தில் கடந்த சில ஆண்டுகளாக சிமெண்ட் சாலைகள் தரமற்ற முறையில் அமைக்கப்படுகின்றன. முன்பு போடப்பட்ட சாலையின் மேல் நேரடியாக சிமெண்ட் சாலை போடப்படுவதால், அடிப்படை கூட்டமைப்பு உறுதியற்றதாகி, சாலைகள் விரைவில் பழுதடைகின்றன. இது பொது நிதியின் வீணடிப்பையும் காட்டுகிறது. அதே நேரத்தில் 2023 முதல் 2025 வரையிலான மூன்று ஆண்டுகளாக பேரூராட்சி பணிகளில் JCB இயந்திரம் பயன்படுத்தியதற்காக சுமார் ரூ.3,60,000 வரை செலவிடப்பட்டுள்ளதாக ஆவணங்களில் காணப்படுகிறது. ஆனால், நடைமுறையில் அந்த அளவுக்கு இயந்திரம் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன. இதனால், இதில் நிதிக் கொள்ளை இடம்பெற்றிருக்க வாய்ப்பு இருப்பதாக பொதுமக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இத்தகைய நிலைமைகளை

கருத்தில் கொண்டு, தக்கோலம் பேரூராட்சி பணிகள் முழுமையாக சீராய்வு செய்யப்பட வேண்டும். தரமற்ற சாலைகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான நிதி செலவுகள் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம்.

பேரூராட்சி செயலர் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணியாற்றி வருவதால், அந்த காலப்பகுதியில் ஏற்பட்ட வரவு-செலவுகள் மற்றும் தொடர்புடைய ஒப்பந்தங்களை பரிசீலித்தால் உண்மை வெளிச்சத்திற்கு வரும். மேலும், அவரது ஓய்வு பெறும் காலம் இம்மாதமே வர இருப்பதால், தாமதமின்றி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது. அவரது கைப்பேசி அழைப்புகள் மற்றும் குரல் பதிவுகளை ஆய்வு செய்தால், சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களும் வெளிப்படையாக தெரியவரும்".

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ரா. மாதேஸ்வரன் என்பவர் தனது 31.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 160/2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

(i) திடக்கழிவு மேலாண்மை பணி தொடர்பான புகாருக்கான விளக்கம்

தக்கோலம் பேரூராட்சியில் 15-வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் 2022-2023 நிபந்தனையற்ற மானியம் திட்டத்தின் கீழ் பேரூராட்சி வளமீட்பு பூங்காவில் உள்ள வரலாற்று கழிவுகளை (Historical Waste) அகற்றி நிலத்தினை மீட்டெடுக்கும் பணி தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.11.20 இலட்சத்திற்கு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க. எண். 4759/2020/உ2, நாள் 22.05.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து நான்கு முறை ஆன்லைன் மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் / எந்த நிறுவனமும் பங்கு ஏற்காத நிலையில் 07.02.2024 அன்று இணையதளம் மூலமாக கோரப்பட்ட ஐந்தாவது ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பிற்கு நான்கு நபர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த GENUINE REVIVER INDUSTRIES PRIVATE LIMITED PLOT NO. 17, SHANTHI NAGAR, METHA NAGAR EXTENSION, KUNDRATHUR, CHENNAI- 600 069 என்ற நிறுவனத்திற்கு 23.02.2024 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. துரதிஷ்டவசமாக 04.12.2023 அன்று வீசிய மிக்ஜாம் புயல் காரணமாக பேரூராட்சி வளமீட்பு பூங்காவில் அதிக அளவிலான மழைநீர் தேங்கி இருந்த காரணத்தால் இயந்திரங்களை நிறுவ இயலாத நிலை காரணமாக பணி ஆணை வழங்கி மூன்று மாதத்திற்கு பிறகு தான் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு பணிகள் துவங்கப்பட்டது. தொடர்ந்து பணிகள் நடந்து வந்த நிலையில் மீண்டும் அக்டோபர் 2024, நவம்பர் 2024 ஆகிய மாதங்களில் பெய்த வடகிழக்கு பருவமழை காரணமாகவும், 27.11.2024 வீசிய பென்ஜால் புயல் காரணமாகவும், மீண்டும் பேரூராட்சி வளமீட்பு பூங்காவில் அதிக அளவிலான மழைநீர் தேங்கி இருந்த காரணத்தால் கழிவுகள் ஈரமாகிவிட்டன. பின்னர் நிலை சீரடைந்த பின் கழிவுகளை பயோமைனிங் முறையில் பிரித்தெடுக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இயற்கை இடர்பாடுகள் காரணமாகவே பணிகள் காலதாமதமாக துவக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டு மீண்டும் தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பயோமைனிங் பணிகள் நடைபெற்று வருவதற்கான புகைப்படங்கள் ஆதாரமாக இணைக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை இத்திட்டப் பணிக்கான எந்த ஒரு தொகையும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவில்லை. இளநிலை பொறியாளரின் அறிக்கையினையும் இத்துடன் இணைத்துள்ளேன் என்ற விவரத்தினை பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

<u>(ii) சங்கீதா நகரில் DTCP அனுமதியின்றி பூங்கா மற்றும் சாலை அமைக்கப்பட்டது தொடர்பான புகாருக்கான விளக்கம்</u>

சங்கீதாநகர் பகுதியானது 20.10.2016க்கு முன் DTCPயால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பேரூராட்சியிலும் குறைந்தது இரண்டு பூங்காங்க்களை அம்ரூட் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய பேரூராட்சிகளின் இயக்குநரகத்தால் அறிவுரை வழங்கப்பட்டதை தொடர்ந்து சங்கீதா நகர் மனைப்பிரிவுதாரரால் தானமாக ஒப்படைக்கப்பட்ட பூங்காவிற்கு என ஒதுக்கப்பட்ட பூங்கா இடத்தில் 2022-2023 அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் பூங்காவினை மேம்பாடு செய்ய மதிப்பீடு ரூ.26.44 இலட்சத்திற்கு பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் கடிதம் நக. எண். 11538/2021-2/ஆ4, நாள் 03.10.2022ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நான் இப்பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியில் சேருவதற்கு முன்னரே 02.11.2022ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

சங்கீதா நகர் மனைப்பிரிவு அமைக்கும் போது மனைப்பிரிவுதாரரால் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகளில் பூங்காவிற்கு செல்லும் சாலையானது பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் இருந்ததால் அணுகு சாலை சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டது. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட பூங்காவின் புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டது. இதில் எந்த விதிமீறல்களும், முறைகேடுகளும், நிதியிழப்பும் ஏற்படவில்லை. இச்செயல்பாடுகள் முற்றிலும், பொதுமக்களின் நலன்கருதி செய்யப்பட்ட பணிகள் ஆகும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த ஒரு அனுமதி இல்லாத மனைப்பிரிவு வீடுகளுக்கும் பேரூராட்சி செயல் அலுவலரால் பேரூராட்சி மன்ற தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படவில்லை. வீடு இல்லாத எந்த ஒரு இடத்திற்கும், வீட்டு வரி நிர்ணயம் செய்து வழங்கப்படவில்லை என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>(iii) S.N. கண்டிகை சாலைக்கு மீண்டும் தார்சாலை அமைக்கப்பட்டது தொடர்பான புகாருக்கான விளக்கம்</u>

தக்கோலம் பேரூராட்சிக்குட்பட்ட 1வது வார்டு எஸ்.என். கண்டிகை என்ற குடியிருப்பானது தக்கோலம் பேரூராட்சியின் அரக்கோணம் சாலையில் இருந்து 1.2 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இக்குடியிருப்பு பகுதிக்கு அணுகு சாலை அமைக்க 2021-2022ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் பணிகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.80.00 இலட்சத்தில் பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க. எண். 12435/2021/ஆ5, நாள் 19.11.2021ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த பணியானது 31.03.2022 தேதிக்கு முன்பு பணிகள் முடிவு பெற்றுள்ளது. நான் இப்பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியில் சேருவதற்கு முன்பே பணி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் இருந்து வருகிறது.

அரக்கோணம் சாலையில் இருந்து S.N. கண்டிகை செல்லும் சாலை கல்லேரி என்ற ஏரியின் கரையில் அமைந்திருந்த சாலையாகும். அரக்கோணம் சாலையில் இருந்து 100 மீட்டர் தூரத்திற்கு மட்டுமே தக்கோலம் பேரூராட்சியின் சாலை பதிவேட்டில் சாலையின் பதிவு செய்யப்பட்டு குறியீட்டு எண் பெறப்பட்டிருந்ததால் அரக்கோணம் சாலையில் இருந்து 100 மீட்டர் மட்டுமே 2021-2022ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ்

சாலை அமைக்கப்பட்டு கல்லேரி ஏரி கரையில் சாலை அமைக்கப்படாமல், அதனை தொடர்ந்து இருந்த எஸ்.என். கண்டிகை குடியிருப்பு பகுதியில் சாலைகள் நிர்வாக அனுமதியின்படியும், மதிப்பீட்டின்படியும், மீதமுள்ள 1040 மீட்டருக்கு சாலைகள் அமைக்கப்பட்டது.

கல்லேரி கரையின் மீது இருந்த சாலையானது இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மாங்காட்டுச்சேரி ஊராட்சிக்கு உட்பட்ட சாலையாக இருந்தது. இச்சாலையினை தொடர்ந்து தக்கோலம் பேரூராட்சியை சேர்ந்த வார்டு எண். 1ஐ சேர்ந்த பொதுமக்களுக்கு ஏதுவான சாலையாகும். வார்டு எண்.1ஐ சேர்ந்த பொது மக்கள் நீண்ட நாள் கோரிக்கையாக போக்குவரத்திற்கு ஏதுவாக சாலை அமைத்து தர வேண்டி எனக் கோரியதின் அடிப்படையில் S.N. கண்டிகை பொது மக்களின் நலன் கருதி அந்த சாலையினை பேரூராட்சியின் பராமரிப்பிற்கு வழங்க கோரி மாமன்ற பெருந்தலைவர், நெமிலி ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு பேரூராட்சி நிர்வாகம் மூலமாக கடிதம் அனுப்பப்பட்டது. மேற்கண்ட கோரிக்கையை ஏற்று நெமிலி ஊராட்சி ஒன்றிய மாமன்ற கூட்டத்தில் தக்கோலம் பேரூராட்சியின் வசம் ஒப்படைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தீர்மான நகலானது வட்டார வளர்ச்சி அலுவலர், நெமிலி ஊராட்சி ஒன்றியம் அவர்களால் நகல் அனுப்பப்பட்டது. இவ்வாறு அனுப்பப்பட்ட கடிதத்தினையும், தீர்மானத்தையும் ஏற்று இச்சாலையினை தக்கோலம் பேரூராட்சியின் சாலை பதிவேட்டில் பதிவு செய்யவும், அதற்கான குறியீட்டு எண் பெறவும் எதிர்காலத்தில் இச்சாலையினை ஏதாவது ஒரு திட்டத்தில் சாலை அமைக்க பணி தேர்வு செய்யவும் தக்கோலம் பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்காலக் கட்டத்தில் மாங்காட்டுச்சேரி ஊராட்சிக்குட்பட்ட அருந்ததி பாளையத்தினை சேர்ந்த திரு. எஸ். நந்தகோபால் என்பவர் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணைய தலைவருக்கு எழுதிய கடிதத்தில் S.N. கண்டிகை மற்றும் அருந்ததிபாளையம் செல்ல சாலை அமைத்து தர கோரிக்கை விடுத்திருந்தார். இக்கோரிக்கையானது இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டது. இந்த கடிதத்தினை இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், இராணிப்பேட்டை மாவட்ட திட்ட இயக்குநர் அவர்களுக்கு இச்சாலையினை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்ததை தொடர்ந்து இப்பரிந்துரை பேரூராட்சி நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டது.

மேற்கண்ட சூழ்நிலையில் தக்கோலம் பேரூராட்சி நிர்வாகத்தால் 2024-2025ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்க நிர்வாக அனுமதி கோரி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டு தற்போது சாலைகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை கன்னியாகுமரி தொழிற்தட சாலை திட்டத்தின் கீழ் அரிகல்பாடி – பேரம்பாக்கம் - தண்டலம் (அரக்கோணம் சாலை) சாலையானது தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறையால் ஏற்கனவே உள்ள சாலையினை புனரமைப்பு செய்யப்பட்டு அகலப்படுத்தப்பட்டது. 2023, 2024 ஆண்டுகளில் ஏற்பட்ட புயல், பருவமழை ஆகிய இயற்கை இடர்பாடுகளால் சேதடைந்த சாலைகளை மறுசீரமைப்பு செய்யவும், நெடுஞ்சாலைத் துறையின் சாலையின் கிடை மட்டத்திற்கு ஏற்ப சாலைகள் அமைத்தால் தான் மழைநீர் தேங்காமல் இருக்கும் என பொறியியல் பிரிவு அலுவலர்களால் முடிவு செய்யப்பட்டதாலும், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சாலை அமைக்கப்பட வேண்டும் என்ற விதிகளை பின்பற்ற இயலாத சூழ்நிலை இருந்ததாலும் மதிப்பீட்டில் அரக்கோணம் சாலையிலிருந்து ஏற்கனவே 2021-2022ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த சாலையின் மேற்புறத்தில் முதல் 100 மீட்டர் அளவிற்கு மட்டுமே S.N. கண்டிகை சாலையின் மீது 2024-2025ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.145.00 இலட்சத்தில் அரசாணை (2டி) எண். 24, நகராட்சி நிர்வாகம்

மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2.(ii) துறை, நாள் 19.03.2025ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு சாலை அமைக்கப்பட்டது.

இந்த சாலை பணி மேற்கொண்டதில் எந்த விதிமீறல்களும், முறைகேடுகளும், நிதியிழப்பும் ஏற்படவில்லை. இச்செயல்பாடுகள் முற்றிலும் ஆதிதிராவிட பொதுமக்களின் நலன்கருதி செய்யப்பட்ட பணிகள் ஆகும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(iv) பெரிய தெருவில் தரமற்ற சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது தொடர்பான புகாருக்கான விளக்கம்

2021-2022ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) சேமிப்பு, வட்டித் தொகை நிதி திட்டத்தின் கீழ் ரூ.50.77 இலட்சத்தில் 3 (மூன்று) பணிகள் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 10110/2022-2/ஆ5, நாள் 21.12.2022ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தக்கோலம் பேரூராட்சியின் பெரியத் தெரு பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது. இச்சாலை அமைக்கும்போது இயற்கை சீற்றத்தால் அன்று இரவு மழை பெய்த காரணத்தால் சாலையின் மேற்பகுதி சிறிதளவு மழை நீரால் பாதிக்கப்பட்டது. மேலும் சாலை பக்குவப்பட்டு உறுதியாவதற்கு முன்பே முக்கிய போக்குவரத்து சாலையில் ஏற்பட்ட விபத்து காரணமாக கனரக வாகனங்கள் மற்றும் போக்குவரத்து இந்த பெரிய சாலையின் பகுதியில் திருப்பிவிட வேண்டிய கட்டாயத்தில் காவல்துறையால் போக்குவரத்து வழி மாற்றம் செய்யப்பட்டது. இதன் காரணமாக சாலையின் மேற்பகுதி சிறிதளவு மேலும் பழுதானது. மேலும் 2023, 2024 ஆண்டுகளில் ஏற்பட்ட புயல், பருவமழை ஆகிய இயற்கை இடர்பாடுகளால் சாலைகள் சேதமடைந்தது. இந்த பழுதுகள் ஒப்பந்ததாரரால் அடுத்து வந்த வாரங்களில் சரி செய்யப்பட்டது.

(v) பேரூராட்சி பகுதிகளில் தரமற்ற சாலைகள் அமைக்கப்பட்டது தொடர்பான புகாருக்கான விவரம்

2023-2024ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.89.00 இலட்சத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க. எண். 8500/2023/ஆ5, நாள் 07.06.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு சிமெண்ட் சாலைகள் மறுசீரமைப்பு செய்ய பணிகள் தேர்வு செய்ய பேரூராட்சிகளின் ஆணையரகத்திலிருந்து அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து 7 எண்ணிக்கையிலான சிமெண்ட் சாலைகள் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு சாலைகள் அமைக்கப்பட்டது. இச்சாலைகள் பொறியியல் பிரிவு, பணி ஆய்வாளர்கள், பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் ஆகியோர்களால் தரம் மற்றும் அளவீடுகள் சரிபார்க்கப்பட்டு இச்சாலைகள் அமைக்கப்பட்டது.

2024-2025ஆம் ஆண்டு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.175.00 இலட்சத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க. எண். 1576/2024/ஆ5, நாள் 22.07.2024ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு சாலைகள் மறுசீரமைப்பு செய்ய பணிகள் தேர்வு செய்ய பேரூராட்சிகளின் ஆணையரகத்திலிருந்து அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து 9 எண்ணிக்கையிலான சாலைகள் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு சாலைகள் அமைக்கப்பட்டது. இச்சாலைகள் பொறியியல் பிரிவு, பணி ஆய்வாளர்கள், பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் ஆகியோர்களால் தரம் மற்றும் அளவீடுகள் சரிபார்க்கப்பட்டு இச்சாலைகள் அமைக்கப்பட்டது. சாலை மறுசீரமைப்பு என்பது ஏற்கனவே உள்ள சாலையின் மீது மீண்டும் சாலை அமைக்கும் பணியாகும். புகார் அளித்தவர் தொழில்நுட்ப ரீதியாக அதனை புரிந்து கொள்ளவில்லை.

மேற்கண்ட இரண்டு திட்டத்தின் கீழ் சாலைகள் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொண்டதில் எந்த விதிமீறல்களும், முறைகேடுகளும், நிதியிழப்பும் ஏற்படவில்லை. இச்செயல்பாடுகள் முற்றிலும் பொதுமக்களின் நலன்கருதி செய்யப்பட்ட பணிகள் ஆகும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(vi) <u>2023 முதல் 2025 வரை JCB இயந்திரம் பயன்படுத்தாமல் ரூ. 3.60 இலட்சம் முறைகேடு செய்ததாக புகாருக்கான விளக்கம்</u>

23.01.2023 அன்று அழகுராஜ பெருமாள் கோயில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் வருகை புரிந்தனர். இந்நிகழ்ச்சியை சிறப்பாக குறைபாடுகள் இன்றி நடத்த இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டதால், இக்கோயிலுக்கு செல்லும் சாலையானது JCB இயந்திரம் மூலம் புனரமைக்கப்பட்டு கோயில் செல்லும் வழியானது சரி செய்யப்பட்டது. 24.12.2024 அன்று பென்ஜால் புயல் காரணமாக ஊருக்குள் புகுந்த மழைநீரானது JCB இயந்திரம் மூலம் அப்புறப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்வின் போது இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் உடன் இருந்து அறிவுரை வழங்கியதை தொடர்ந்து பேரூராட்சி அனைத்து பகுதிகளிலும் JCB இயந்திரம் மூலம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

2023, 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் மக்களுடன் முதல்வர், உங்களைத் தேடி உங்கள் ஊரில் போன்ற திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் உயர் அலுவலர்களின் ஆய்வின்போது சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மழை காலங்களில் மழைநீர் வடிகால்வாய் கழிவுநீர் தேங்காவண்ணம் இயந்திரங்கள் பயன்படுத்தி பொதுமக்கள் இன்னல்களை தீர்க்கவும் பொதுமக்கள் கோரிக்கையை துப்புரவு மேற்பார்வையாளரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் JCB இயந்திரங்கள் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு செலுத்தப்பட்ட தொகைகளுக்கு மன்றத்தில் முறையாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு தணிக்கை அறிக்கையிலும் இது குறித்து கடுங்குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படவில்லை. இதில் எவ்வித விதிமீறலும் முறைகேடும் இல்லை மற்றும் சாலையோரங்களில் JCB இயந்திரங்கள் மூலம் சரி செய்யப்பட்டது.

2023 முதல் 2025 வரை இரண்டு முறை வடகிழக்கு பருவமழை, இரண்டு முறை தென்மேற்கு பருவமழை, 2023ஆம் ஆண்டு ஏற்பட்ட மிக்ஜாம் புயல் மற்றும் 2024ஆம் ஆண்டு ஏற்பட்ட பென்ஜால் புயல் காரணமாக பேரூராட்சியின் பல்வேறு தெருக்களில் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் சூழ்ந்து பொதுமக்களுக்கு இடையூறாக இருந்த சூழ்நிலையில் JCB இயந்திரம் மூலம் மழைநீர் அகற்றப்பட்டது.

2024 பென்ஜால் புயலின்போது தக்கோலம் பேரூராட்சியினை நேரடியாக ஆய்வு செய்ய இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் போர்க்கால அடிப்படையில் மழைநீர் அகற்றும் பணிகளை துரிதமாக செய்து முடிக்க அறிவுரை வழங்கியதை தொடர்ந்து JCB இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டது.

07.03.2025 அன்று மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர், தக்கோலம் பகுதிக்கு வருகை புரிந்ததை ஒட்டி அவர் கடந்து செல்ல இருந்த 2 முதல் 3 கிலோ மீட்டர் அளவிற்கு பே ரூராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த சாலையின் இருபுறமும் புனரமைப்பு பணிகள் JCB இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

<u>(vii) பேரூராட்சி செயல் அலுவலர் ஒரே இடத்தில் 3 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிவதாக புகாருக்கான விளக்கம்:</u>

புகார் அளித்த திரு. க. பிரகாஷ் என்பவர் பேரூராட்சி பகுதியில் விளம்பர பேனர் வைக்க பேரூராட்சி நிர்வாகத்திடம் அனுமதி கோரினார். உரிய தொகை செலுத்தி காவல் துறை அனுமதி பெற்று போக்குவரத்திற்கோ, பொதுமக்களுக்கோ இடையூறு இல்லாமல் பேனர் அமைக்க தெரிவிக்கப்பட்டது. பேரூராட்சி நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு உடன்படாததால் இந்த புகார் மனுவினை எந்த ஒரு ஆதாரமும் இன்றி தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டில் புகார் அளித்த திரு. க. பிரகாஷ் என்பவரால் பேரூராட்சியின் பராமரிப்பு பணிகளுக்கு JCB இயந்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டது. பணிகளை சரிவர செய்யாததால் தற்போது வேறு ஒரு நிறுவனத்தின் JCB இயந்திரம் வாடகை அடிப்படையில் பேரூராட்சியின் பராமரிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த காழ்புணர்ச்சியின் காரணமாகவும், போலியான புகார்களை எழுப்பி வருகிறார்.

பணியில் எந்த ஒரு சுணக்கமோ, குறைபாடோ இல்லாமல் தனது பணியினை செவ்வனே செய்து வருவதாகவும், இந்த ஆதாரமற்ற புகாரினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 09.09.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.09.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. க. பிரகாஷ் என்பவர் 09.09.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை. இருப்பினும் மனுதாரருக்கு மற்றொரு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 07.11.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 31.10.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரரான திரு. க. பிரகாஷ் என்பவர் 07.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

(i) “இராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவு குப்பைகளை வகைப்படுத்தி அகற்றும் பணிகள் நடைபெறாமல் ஒப்பந்ததாரருக்கு காசோலை வழங்கப்பட்டது.

(ii) சங்கீதா நகரில் DTCP அனுமதியில்லாத பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் பூங்காக்கள் அமைத்ததில் சுமார் ரூ. 2 கோடி நிதியிழப்பு.

(iii) சங்கீதா நகரில் பேரூராட்சி அனுமதி பெற்ற வீட்டு மனைகள் (DTCP) பேரூராட்சி வளர்ச்சி நிதியிலிருந்து ஒதுக்க வேண்டிய தொகை எவ்வளவு என்பதையும் எந்த கணக்கில் வரவுவைக்கப்பட்டது என்ற விவரமும் தரப்படவில்லை. எனவே, இதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், இந்த விவரத்தினை எனக்கு பேரூராட்சியில் இருந்து கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(iv) S.N. கண்டிகை சாலையில் 2021-22ஆம் ஆண்டில் தார்சாலை அமைக்கப்பட்ட சாலைக்கு மீண்டும் 2024-25ஆம் ஆண்டில் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் தார்சாலை விதிமீறி அமைக்கப்பட்டது. (5 ஆண்டுகளுக்கு 1 முறை தார்சாலை அமைக்கப்பட வேண்டும்).

(v) பெரிய தெருவிலும் மற்றும் பேரூராட்சி பகுதியிலும் தரமற்ற சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டன. இதனால் சாலைகள் பிளந்து போக்குவரத்திற்கு இடையூறாகவும் மற்றும் அச்சுறுத்தலாகவும் உள்ளது.

(vi) 2023ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரை JCB இயந்திரம் பயன்படுத்தாமல் அதனை உபயோகம் செய்ததாக முறைகேடாக ரூ.3.60 இலட்சம் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

(vii) தக்கோலம் பேரூராட்சியில் அனுமதியில்லாத கோல்டன் நகர் மனைக்கு வீட்டு வரி கொடுத்துள்ளார்கள்.

மேற்காணும் புகார்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ச. லோகநாதன் மற்றும் பேரூராட்சி இளநிலை பொறியாளர் திரு. கோ. மணிமுடியன் என்பவர்கள் 07.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

➢ திடக்கழிவு மேலாண்மைப் பணி தொடர்பான புகார் குறித்து: -

தக்கோலம் பேரூராட்சியால் 15-வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் 2022-23-ஆம் ஆண்டு நிபந்தனையற்ற மானியத் திட்டத்தின் கீழ் பேரூராட்சி வள மீட்பு பூங்காவில் உள்ள வரலாற்று கழிவுகளை (Historical Waste) ரூ.11.20 இலட்சம் மதிப்பீட்டில் அகற்றிட பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் 23.02.2024 அன்று ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. பூங்காவில் மிக்ஜாம் புயல் காரணமாக அதிகளவு மழைநீர் தேங்கி இருந்த காரணத்தினாலும் மற்றும் பருவ மழை காரணமாகவும் கழிவுகள் ஈரமாகிவிட்டதால் நிலைமை சீரடைந்த பின்னர் கழிவுகளை பயோமைனிங் முறையில் பிரித்தெடுக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்பணிக்காக ஒப்பந்ததாரருக்கு எவ்வித தொகையும் வழங்கப்படவில்லை.

(II) சங்கீதா நகரில் DTCP அனுமதியின்றி பூங்கா மற்றும் சாலை அமைக்கப்பட்டது தொடர்பான புகார் குறித்து:-

இப்பகுதியானது 20.10.2016-க்கு முன் DTCP மூலம் மனைப் பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண். 312/2002-ல் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் மேற்படி பகுதியானது DTCP ஒப்பளிப்பு (Approval) அளிக்கப்படவில்லை என தகவல் பெறும் சட்டத்தின் கீழ் மனுதாரருக்கு தவறுதலாக தகவல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சங்கீதா நகரில் தானமாக வழங்கப்பட்ட பத்திரப் பதிவு ஆவண எண். 22/2003 நாள் 06.01.2003 தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் பூங்கா அமைக்க ரூ.26.44 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்திட பேரூராட்சிகளின் ஆணையரின் 03.10.2022 நாளிட்ட கடிதம் மூலம் நிர்வாக

அனுமதி பெறப்பட்டு, 02.11.2022 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பூங்காவிற்கு செல்லும் பாதையானது பயன்படுத்தப்படாத நிலையில் இருந்ததால் அணுகு சாலையானது பொதுமக்களின் நலன் கருதி சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டு, எவ்வித விதி மீறல்களும், நிதியிழப்பும் ஏற்படவில்லை.

(iii) 2020–21ஆம் ஆண்டில் தார்சாலை அமைக்கப்பட்ட S.N. கண்டிகைசாலைக்கு மீண்டும் 2024-25ஆம் ஆண்டில் விதிமீறி தார்சாலை அமைக்கப்பட்டது என்கின்ற புகார் குறித்து:-

சென்னை கன்னியாகுமரி தொழிற்தட சாலை திட்டத்தின் கீழ் அரிகல்பாடி – பேரம்பாக்கம் - தண்டலம் (அரக்கோணம் சாலை) சாலையானது தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறையால் ஏற்கனவே உள்ள சாலையினை புணரமைப்பு செய்யப்பட்டு அகலப்படுத்தப்பட்டது. 2023-24 ஆண்டுகளில் ஏற்பட்ட புயல், பருவமழை ஆகிய இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளை மறுசீரமைப்பு செய்யவும், நெடுஞ்சாலைத் துறையின் சாலையின் கிடைமட்டத்திற்கு ஏற்ப சாலைகள் அமைத்தால் தான் மழைநீர் தேங்காமல் இருக்கும் என பொறியியல் பிரிவு அலுவலர்களால் முடிவு செய்யப்பட்டதாலும், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சாலை அமைக்கப்பட வேண்டும் என்ற விதிகளை பின்பற்ற இயலாத சூழ்நிலை இருந்ததாலும் மதிப்பீட்டில் அரக்கோணம் சாலையிலிருந்து ஏற்கனவே 2021-22ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த சாலையின் மேற்புறத்தில் முதல் 260 மீட்டர் அளவிற்கு மதிப்பீட்டின்படி Provision வழங்கப்பட்ட WMM, DBM and BC மட்டுமே பயன்படுத்தி சாலை அமைக்கப்பட்டது. மீதமுள்ள சாலைக்கு GSB, WMM, DBM and BC எஸ்.என்.கண்டிகை சாலையின் மீது 2024-25ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.145.00 இலட்சத்தில் அரசாணை (2டி) எண். 24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2(1) ) துறை நாள் 19.03.2025ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி சாலை அமைக்கப்பட்டது.

(iv) பெரிய தெருவிலும் மற்றும் பேரூராட்சி பகுதியிலும் தரமற்ற சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டது என்கின்ற புகார் குறித்து:-

பேரூராட்சிக்குட்பட்ட பெரிய தெருவில் ரூ.50.77 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்க 2021-22ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) சேமிப்பு, வட்டித் தொகை நிதி திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பெரிய தெரு பகுதியில் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டவுடன் அன்று இரவு பெய்த கனமழையால் சாலை சிறிதளவு பாதிப்பு ஏற்பட்டது. மேலும் முக்கிய சாலையில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக கனரக வாகனங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் அனைத்தும் இந்த பெரியதெரு சாலை பகுதியில் காவல் துறையால் திருப்பி விடப்பட்டதால் இச்சாலையானது மேலும் பழுதானது. இதுதவிர, 2023-

2024ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் காரணமாக இச்சாலைகள் மேலும் சேதமடைந்தன. இச்சாலை பழுதுகள் அனைத்தும் ஒப்பந்ததாரரரின் சொந்த செலவில் மீண்டும் அந்த சாலையை பழுதுநீக்கம் செய்து கொடுக்கப்பட்டு, மூன்றாம் நபர் தரச் சான்று பெறப்பட்டுள்ளது.

தக்கோலம் பேரூராட்சியில் 23.01.2023 அன்று அழகுராஜ் பெருமாள் கோயில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு இந்துசமயம் அறநிலையத் துறை அமைச்சர் மற்றும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர், இதர அரசு உயர் அலுவலர்கள் இந்நிகழ்ச்சி சிறப்பாக நடத்த மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுரை வழங்கப்பட்டதன் பேரில் கோயிலுக்கு செல்லும் சாலை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும் JCB இயந்திரம் கொண்டு சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது. மேலும், 24.12.2024 அன்று பென்ஜால் புயல் அதீத கனமழை காரணமாக கால்வாய் மற்றும் பொது இடங்கள் மற்றும் பொதுமக்கள் வசிக்கும் பகுதியில் அதிக மழை நீர் தேங்கியுள்ளதால் இதனை JCB இயந்திரம் கொண்டு பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பு ஏற்படாதவாறு மழைநீர் வழிந்தோடும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அவ்வப்போது தக்கோலம் பேரூராட்சியில் அமைந்துள்ள கோயில்களில் விழாக்கள் நடைபெறும்போது JCB இயந்திரம் கொண்டு பேரூராட்சி பணியாளர்களை கொண்டும் பொதுமக்கள் நலன் கருதி பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இச்செலவினங்களுக்கு முறையே மன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது குறித்து தணிக்கை ஆண்டில் தணிக்கை மேற்கொள்ளும்போது குறைபாடுகள் ஏதும் சுட்டிக்காட்டப்படவில்லை. இதில் விதிமீறல்கள் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை. இப்பணிகள் அனைத்தும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி பணிகள் முறையே செய்யப்பட்டுள்ளது.

தக்கோலம் பேரூராட்சியில் அனுமதியில்லாத கோல்டன் நகர் மனைக்கு வீட்டுவரி கொடுத்துள்ளார்கள் என மனுதாரரால் ஏற்கனவே புகாரில் தெரிவிக்கப்படவில்லை. 07.11.2025-ல் நேரடி விசாரணையில் மேற்படி புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்புகார் குறித்து உரிய ஆய்வு செய்து பதிலறிக்கை பின்னர் தெரிவிக்கப்படும்.

மேற்படி புகார்கள் குறித்து முறைகேடுகள் மற்றும் நிதியிழப்பு ஏதும் ஏற்படுத்தவில்லை. மேற்படி பணிகள் அனைத்தும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி அமைக்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்".

8. மனுதாரர் திரு. க. பிரகாஷ் என்பவர் 07.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையின்போது தனது வாக்குமூலத்தில் 14.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவிக்காத கூடுதல் புகாரான தக்கோலம் பேரூராட்சியில் அனுமதியில்லாத கோல்டன் நகர் மனைக்கு வீட்டுவரி கொடுத்துள்ளார்கள் என்கிற புகாருக்கு தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.12.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 59/2025ல் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

தக்கோலம் பேரூராட்சியில் கோல்டன் நகர் மனைப்பிரிவில் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017ன்படி தனிமனை வரன்முறை செய்யப்பட்ட இடத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை மற்றும் அரசாணை எண். 161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.11.2000ன்படியும், வரிவிதிக்கப்படாத கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு செய்தல் திட்டத்தின்படி கட்டிடங்களுக்கு 13 அரையாண்டுகள் கணக்கீடு செய்யப்பட்டு வரிவிதிப்பு எண். 3374ன்படி 28.03.2024ஆம் தேதி அன்று வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது 14.07.2025 நாளிட்ட முறையீட்டு மனு மற்றும் வாக்குமூலத்தில் இராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம் பேரூராட்சியில் கீழ்க்காணும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

(i) தக்கோலம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெறாமல் ஒப்பந்ததாரருக்கு காசோலை வழங்கப்பட்டது.
(ii) பெரிய தெருவில் தரமற்ற சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது.
(iii) பேரூராட்சி பகுதிகளில் தரமற்ற சாலைகள் அமைக்கப்பட்டது.
(iv) பேரூராட்சி செயல் அலுவலர் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிவதில் முறைகேடுகள் ஏற்படுதல்.
(v) சங்கீதா நகரில் DTCP அனுமதியில்லாத பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் பூங்காக்கள் அமைத்ததில் சுமார் ரூ. 2 கோடி நிதியிழப்பு.
(vi) SN கண்டிகை சாலையில் 2021-22ஆம் ஆண்டில் தார்சாலை அமைக்கப்பட்ட சாலைக்கு மீண்டும் 2024-25ஆம் ஆண்டில் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கப்பட்டது. (5 ஆண்டுகளுக்கு 1 முறை தார்சாலை அமைக்கப்பட வேண்டும்).
(vii) 2023ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரை JCB இயந்திரம் பயன்படுத்தாமல் அதனை உபயோகம் செய்ததாக முறைகேடாக ரூ.3.60 இலட்சம் நிதியிழப்பு
(viii) அனுமதியற்ற கோல்டன் நகர் மனைப்பிரிவிக்கு வீட்டுவரி வசூலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களுக்கு முறையே பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது அறிய வருகிறது.

**(i) <u>தக்கோலம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெறாமல் ஒப்பந்ததாரருக்கு காசோலை வழங்கப்பட்டது குறித்து</u>**

ரூ.11.20 இலட்சம் மதிப்பீட்டில் தக்கோலம் பேரூராட்சி வளமீட்பு பூங்காவில் உள்ள வரலாற்று கழிவுகளைஅகற்றி நிலத்தினை மீட்க பேரூராட்சிகளின் இயக்குநரின் 22.05.2023 நாளிட்ட நிர்வாக அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி மூலம் பணிகள் மேற்கொள்ளும்போது வடகிழக்கு பருவமழை, மிக்ஜாம் புயல் காரணமாக கழிவுகள் ஈரமாகியுள்ளதால், பயோமைனிங் முறையில் கழிவுகள் பிரித்தெடுக்கும் பணி

தொடர்ந்து நடைபெற்று வருகிறது எனவும், இயற்கை இடர்பாடுகள் காரணமாக பணிகள் மேற்கொள்ள தாமதம் ஏற்பட்டது எனவும், இத்திட்டப் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு எவ்வித தொகையும் நாளது தேதிவரை வழங்கப்படவில்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(ii) பெரிய தெருவில் தரமற்ற சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது குறித்து

2021-22ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.50.77 இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சிக்குட்பட்ட பெரிய தெருவில் சிமெண்ட் சாலைகள் அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டதில், சாலைகள் அமைக்கப்பட்ட நாளன்று இரவில் பெய்த கனமழை காரணமாக கனரக வாகனங்கள் அனைத்தும் இச்சாலையில் திருப்பிவிடப்பட்டதால் இச்சாலையானது பழுதடைந்தது. மேலும் 2023-24ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் காரணமாகவும் இச்சாலைகள் மீண்டும் சேதமடைந்த நிலையில், சாலையில் ஏற்பட்ட பழுதுகள் அனைத்தும் ஒப்பந்ததாரரின் சொந்த செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பேரூராட்சிக்கு எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை. மேலும் சாலையின் உறுதித் தன்மை குறித்து மூன்றாம் நபர் தரச் சான்றும் பெறப்பட்டுள்ளது என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(iii)பேரூராட்சி பகுதிகளில் தரமற்ற சாலைகள் அமைக்கப்பட்டது குறித்து

2024-25ஆம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.175 இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சிக்குட்பட்ட 9 எண்ணிக்கையிலான சிமெண்ட் சாலைகள் மறுசீரமைப்பு செய்ய பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு சிமெண்ட் சாலைகள் சீரமைக்கப்பட்டன. இப்பணிகளில் எவ்வித முறைகேடுகள் மற்றும் நிதியிழப்பும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான மூன்றாம் தரப்பு தரச் சான்றும் பெறப்பட்டுள்ளன என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(iv)பேரூராட்சி செயல் அலுவலர் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிவதில் முறைகேடுகள் ஏற்படுதல் குறித்து.

மனுதாரர் திரு. க. பிரகாஷ் காழ்ப்புணர்ச்சியுடன் பேரூராட்சியில் நடைபெறும் பணிகள் மற்றும் பணியாளர்கள் மீது வேண்டுமென்றே புகாரினை சமர்ப்பித்துள்ளார் என தெரிவித்து, மக்கள் நலனில் மேற்கொண்ட பேரூராட்சி பணிகளில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் வரிசை எண். 1 முதல் IV வரை பேரூராட்சி செயல் அலுவலரால் பேரூராட்சி பணிகள் முறையாக நடைபெற்று உள்ளனவா என்பதை உறுதி செய்திடும் பொருட்டு பேரூராட்சிகளின் இயக்குநரக செயற் பொறியாளரின் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து அக்குழு நேரடியாக கள ஆய்வு செய்து அதன் அறிக்கையை பெற்று அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(v) சங்கீதா நகரில் DTCP அனுமதியில்லாத பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் பூங்காக்கள் அமைத்ததில் சுமார் ரூ. 2 கோடி நிதியிழப்பு குறித்து.**

சங்கீதா நகரில் தானமாக வழங்கப்பட்ட இடத்தில் ரூ.26.44 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநரின் அனுமதி பெறப்பட்டு, பூங்காவிற்கு செல்லும் பாதையானது பயன்படுத்தப்படாத நிலையில், பொதுமக்களின் நலன் கருதி அணுகு சாலையானது சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டதில் எவ்வித நிதியிழப்பும் விதிமீறல்களும் நடைபெறவில்லை செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

**(vi)SN கண்டிகை சாலையில் 2021-22ஆம் ஆண்டில் தார்சாலை அமைக்கப்பட்ட சாலைக்கு மீண்டும் 2024-25ஆம் ஆண்டில் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கப்பட்டது குறித்து.**

2021-2022ஆம் ஆண்டில் S.N. கண்டிகை சாலையில் அமைக்கப்பட்ட தார்சாலையானது 2023-2024ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் மற்றும் பருவமழை ஆகிய இயற்கை சீற்றங்களால் பழுது ஏற்பட்ட சாலைகளை மறுசீரமைப்பு செய்ய 2024-2025ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.145 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்க அரசாணை 2(டி) எண். 24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.03.2025-ல் அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, எவ்வித விதிமீறலின்றி தார்சாலைகள் அமைக்கப்பட்டன என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

**(vii) 2023ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரை JCB இயந்திரம் பயன்படுத்தாமல் அதனை உபயோகம் செய்ததாக முறைகேடாக ரூ.3.60 இலட்சம் நிதியிழப்பு குறித்து.**

2023 முதல் 2025ஆம் ஆண்டு வரை வடகிழக்கு பருவமழை, தென்மேற்கு பருவமழை, மிக்ஜாம் புயல் மற்றும் பென்ஜால் புயல் காரணமாக பேரூராட்சி குடியிருப்பு பகுதிகளில் சூழ்ந்த மழைநீரை JCB இயந்திரம் மூலம் அகற்றிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அத்தொகைகளுக்கு முறையாக பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது மற்றும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு தணிக்கை அறிக்கையில் எவ்வித கடுங்குறைபாடுகள் தெரிவிக்கப்படவில்லை என்பதால் இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

**(Viii) அனுமதியற்ற கோல்டன் நகர் மனைப்பிரிவிக்கு வீட்டுவரி வசூலிக்கப்பட்டது குறித்து.**

அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017ன்படி அனுமதியற்ற கோல்டன் நகர் மனைப் பிரிவில் தனிமனை வரன்முறை செய்யப்பட்ட இடத்தில் பேரூராட்சிகளின் இயக்குநரின் சுற்றறிக்கை மற்றும் அரசாணை எண். 161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.11.2000ன்படியும் வரி விதிக்கப்படாத கட்டடங்களுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் வரிசை எண்கள் (V) முதல் (viii) வரை பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கும் பணிகளில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில், உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கைக் குழு மூலம் தணிக்கை செய்து மற்றும் வரிசை (i) முதல் (iv) வரை உள்ள புகார்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள செயற் பொறியாளர் தலைமையிலான குழு ஆய்வு செய்து அதன் அறிக்கைகளை 3 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத்

துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் எனவும் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. க. பிரகாஷ்,
எண்.2, மீனாட்சி அம்மன் கோவில் தெரு,
தக்கோலம், அரக்கோணம் வட்டம்,
இராணிப்பேட்டை மாவட்டம் – 631 151.

2) செயல் அலுவலர்,
தக்கோலம் முதல்நிலை பேரூராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை – 600 035.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/1/26
செயலாளர்
29/01/26